பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**09 06 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டில் சுகாதார சேவைகளை வலுப்படுத்த மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

2. யமுனை ஆற்றை தூய்மைப்படுத்தும் பணிகளை விரைவுபடுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் வானிலை முன்னறிவிப்பு கட்டமைப்புகள் நவீனமயமாக்கப்பட்டுள்ளதாக புவி அறிவியல் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

4. விசாகப்பட்டினம் எஃகு ஆலையில் நேரிட்ட தீ விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

5. ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் போட்டி சிட்னியில் இன்று தொடங்குகிறது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டில் சுகாதார சேவைகளை வலுப்படுத்த மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

மேற்குவங்கத்தில் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் புதுதில்லியில் நேற்று கையெழுத்தானது.

இந்நிகழ்ச்சியில் பேசிய திரு. ஜெ.பி. நட்டா, மேற்குவங்கமும் இத்திட்டத்தில் இணைந்திருப்பதன் மூலம் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இது செயல்படுத்தப்படுவதாக கூறினார்.

இது மேற்குவங்கத்திற்கு மட்டுமல்லாமல் நாட்டின் சுகாதார பாதுகாப்பில் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வு என்று அவர் தெரிவித்தார்.

உலகின் மிகப்பெரிய கூகாதார காப்பீட்டுத் திட்டமான ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ் இதுவரை 12 கோடிக்கும் அதிகமான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதன் மூலம் ஒரு கோடியே 82 லட்சம் ரூபாய் மதிப்பில் மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மேற்குவங்க முதலமைச்சர் திரு. சுவேந்து அதிகாரி, மாநிலத்தில் இத்திட்டத்தால் ஒரு கோடியே 24 லட்சம் குடும்பங்கள் பயனடையும் என்று கூறினார்.

தேசிய சுகாதார இயக்கத்தின்கீழ் மேற்குவங்கத்திற்கு அண்மையில் 527 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்ததை சுட்டிக்காட்டிய அவர், மாநிலத்தின் வளர்ச்சிக்கு மத்திய அரசு முழு ஆதரவு அளித்து வருவதற்கு நன்றி தெரிவிப்பதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து புதுதில்லியில் நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனை திரு. சுவேந்து அதிகாரி சந்தித்துப் பேசினார்.

மத்திய அரசின் பல்வேறு திட்டங்களை மாநிலத்தில் சிறப்பாக செயல்படுத்துவது குறித்து நிதியமைச்சருடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

<<<<>>>>

யமுனை ஆற்றை தூய்மைப்படுத்தும் பணிகளை விரைவுபடுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக புதுதில்லியில் நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், யமுனை ஆற்றை தூய்மைப்படுத்தும்

இலக்கை அடைய அனைவரும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

குறிப்பாக தில்லி, ஹரியானா மற்றும் உத்தரப்பிரதேச அரசுகள் இணைந்து பணியாற்றி இந்த நதியின் சூழல் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

கழிவுகள் கலப்பதை தடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

தில்லி, ஹரியானா மற்றும் உத்தரப்பிரதேசத்தில் இதுவரை **129** கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த ஆண்டுக்குள் மேலும் **59** சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

யமுனை ஆற்றின் மறுசீரமைப்பு திட்டம் தொடர்பான முன்னேற்றம் குறித்து **20** நாட்களுக்கு ஒருமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்று திரு. அமித் ஷா அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் திரு. மனோகர்லால், திரு. சி.ஆர். பாட்டீல், தில்லி துணைநிலை ஆளுநர்

திரு. தரம்ஜித் சிங் சாந்து, முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா ஆகியோர் பங்கேற்றனர்.

<<<<>>>>

நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் வானிலை முன்னறிவிப்பு கட்டமைப்புகள் நவீனமயமாக்கப்பட்டுள்ளதாக புவி அறிவியல் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

லக்னோவில் புதிய மண்டல வானிலை ஆய்வு மையத்தை நேற்று அவர் திறந்து வைத்தார்.

2014ஆம் ஆண்டுக்கு முன்பு நாட்டில் 17 Doppler ரேடார்கள் மட்டுமே இருந்ததாகவும், தற்போது அது 50ஆக அதிகரித்துள்ளது என்றும் கூறினார்.

வானிலை இயக்கத்தின் கீழ் அடுத்த 2 ஆண்டுகளில் நாட்டில் மேலும் 50 Doppler ரேடார்கள் நிறுவப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

வானிலை முன்னறிவிப்புகளில் கடந்த 12 ஆண்டுகளில் துல்லியம் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் உள்ளூர் அளவில் தயார் நிலை மற்றும் திட்டமிடலுக்கு ஏற்ப வானிலை முன்னறிவிப்புகள் வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

மக்களின் நம்பிக்கையை அதிகரிக்க மேலும் பல மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

திடீர் வெள்ளம், மேகவெடிப்பு, மின்னல், கடும் வெப்பம், பனிப்பொழிவு உள்ளிட்ட தீவிர வானிலை நிகழ்வுகள் குறித்து முன்கூட்டியே துல்லியமான தகவல்களை வழங்கவும், பேரிடர் அபாயத்தை குறைக்கவும் வானிலை ஆய்வு மையங்கள் முக்கிய பங்காற்றி வருவதாக திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>

விசாகப்பட்டினம் எஃகு ஆலையில் நேரிட்ட தீ விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

இந்த ஆலையின் ஒரு பிரிவில் வார்ப்பு பணிகள் நடைபெற்றபோது திடீரென தீப்பிடித்ததால் இந்த விபத்து நேரிட்டதாக எஃகு அமைச்சகம் கூறியுள்ளது.

இதில் காயமடைந்த 6 பேர் மருத்துமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து குறித்து பொதுத்துறை நிறுவனமான **Rashtria Ispath Nigam** லிமிடெட் விசாரணையை தொடங்கியுள்ளது.

இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ள மத்திய எஃகு ஆணையத்தின் 3 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தோருக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மத்திய எஃகுத்துறை அமைச்சர் திரு. குமாரசாமி, சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு ஆகியோர் விபத்து நடந்த இடத்தை நேரில் பார்வையிட்டனர்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எஃகு அமைச்சகத்தின் சார்பில் தலா 25 லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்று திரு. குமாரசாமி அறிவித்துள்ளார்.

உயிரிழந்தோர் குழந்தைகளின் கல்விச் செலவை எஃகு அமைச்சகம் ஏற்கும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்த விபத்து குறித்து ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு, மாநில தலைமைச் செயலாளர், மாவட்ட ஆட்சியர் மற்றும் உயரதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைய அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா கேட்டுக்கொண்டுள்ளார்.

காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கத்தின் இந்திய பிரிவின் வடக்கு மண்டல மாநாட்டை சண்டிகரில் நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

உள்ளூர் அளவிலான திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வதில் சட்டப்பேரவை உறுப்பினர்களின் பங்கு முக்கியமானது என்று அவர் கூறினார்.

மாநில சட்டப்பேரவைகளில் இயற்றப்படும் சட்டங்கள் வருங்கால தலைமுறையினர் நலனுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ப அமைய வேண்டும் என்று திரு. ஓம் பிர்லா வலியுறுத்தினார்.

<<<<>>>>

மும்பை தாராவி பகுதி மறுசீரமைப்பு திட்டத்தில் மக்களின் நலனுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று மகாராஷ்டிர முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், அப்பகுதி மக்களின் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க முன்னுரிமை அளிக்கப்படும் என்று கூறினார்.

2028ஆம் ஆண்டுக்குள் முதற்கட்டமாக 10 ஆயிரம் வீடுகளை கட் பயனாளிகளுக்கு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

எபோலா வைரஸ் பாதிப்பு குறித்து ஆய்வு செய்ய உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் திரு. டெட்ரஸ் அதானோம் உகாண்டா சென்றுள்ளார்.

அங்கு எபோலா தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டின் சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

உகாண்டா அதிபர் திரு. Yoweri Museveni-யையும் திரு. டெட்ரஸ் அதானோம் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.

<<<<>>>>

தாக்குதல்களை நிறுத்துவதாக இஸ்ரேலும் - ஈரானும் பரஸ்பரம் அறிவித்துள்ளன.

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் விடுத்த அழைப்பை ஏற்று இரு நாடுகளும் சண்டைநிறுத்தம் தொடர்பான அறிவிப்பை வெளியிட்டுள்ளன.

இருப்பினும் லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா இலக்குகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால், இஸ்ரேல் மீதான ராணுவ நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கப்போவதாக ஈரான் எச்சரித்துள்ளது.

<<<<>>>>

நாட்டின் வடக்கு மற்றும் வடமேற்கு பகுதியில் இன்று கடும் வெப்பம் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ராஜஸ்தான், மகாராஷ்டிரா, கோவா, ஒடிசா ஆகிய மாநிலங்களின் சில இடங்களில் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

கடலோர கர்நாடகா, கேரளா, மேற்குவங்கம் உள்ளிட்ட மாநிலங்களின் சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் போட்டி சிட்னியில் இன்று தொடங்குகிறது.

இதில் இந்தியா சார்பில் பி.வி. சிந்து, மாளவிகா பன்சோட், லக்ஷயா சென், உள்ளிட்ட முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

-----------

உலகக் கோப்பை வில்வித்தைப் போட்டி துருக்கியில் இன்று தொடங்குகிறது.

வரும் 14ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில் 42 நாடுகளைச் சேர்ந்த 300க்கும் அதிகமான வீரர் வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இந்தியாவின் சார்பில் ஜோதி சுரேகா வெண்ணம், தீபிகா குமாரி, யஷ்தீப் சஞ்சய், தீரஜ் பொம்மதேவரா, அதானு தாஸ் உள்ளிட்ட வீரர் வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

-----------

முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டி இலங்கையின் தம்புலாவில் இன்று தொடங்குகிறது.

வரும் 21ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில் இந்தியா ஏ - இலங்கை ஏ - ஆஃப்கனிஸ்தான் ஏ அணிகள் பங்கேற்கின்றன.

இன்று நடைபெறும் முதல் ஆட்டத்தில் இந்திய ஏ அணி - இலங்கை ஏ அணியை எதிர்கொள்கிறது.

காலை 10 மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

**<<<<The End>>>>**